(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 3(7).]**

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 மார்ச் 25 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2021 ஏப்ரல் 05, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

607/2020

கௌரவ கயந்த கருணாதிலக,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவு வழங்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவை பெறுவதற்கு விண்ணப்பித்து இன்றளவில் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் சிரேஷ்ட பிரஜைகள் மாதாந்தக் கொடுப்பனவை ரூ. 2000.00 இலிருந்து ரூ. 2500.00 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

(v) வெளிநாட்டு யாத்திரைகளுக்கு, சிரேஷ்ட பிரஜைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வேலைத்திட்டமேதும் உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதனை ஒருங்கிணைக்கின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

726/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் லக்கல, பள்ளேகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள லக்கல பிரதேச வைத்தியசாலையை புதிதாக நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை யாது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக் கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றுகின்ற வைத்தியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட தாதியர் பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(vi) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதியர் பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(vii) தற்போது மேற்படி வைத்தியசாலையில் பேணிவரப்படுகின்ற சிகிச்சை நிலையங்களின் வகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

770/2020

கௌரவ முஜிபுர் ரஹ்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மாவட்டத்திலுள்ள பகுதியளவு அரசாங்க பாடசாலைகள் அருகிலுள்ள பிரதேசங்களிலுள்ள வறிய பிள்ளைகளை அனுமதிக்காது அதன் குறிக்கோள்களில் இருந்து விலகிச் செல்கின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறெனில், கொழும்பு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பகுதியளவு அரசாங்க பாடசாலைகள் தொடர்பாக—

(i) பாடசாலைகளின் பெயர்களையும்;

(ii) சமயம் மற்றும் சமயம் சாராத வகுதிகளையும்;

(iii) இனம் மற்றும் சமய அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(iv) முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரையில் ஆங்கிலத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட இருமொழி வகுப்புகளின் எண்ணிக்கையையும்;

(v) அயலிலுள்ள வறிய மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்குறிப்பிடப்பட்ட பாடசாலைகள் தொடர்பாக —

(i) முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரையில் ஆங்கில மொழி மூலம் வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) முதலாம் தரத்திற்கு அனுமதித்தல் தொடர்பான பொது வழிகாட்டல்களை ஏன் பின்பற்றமுடியாது என்பதையும்;

(iii) தற்போது மாணவர்களை அனுமதிக்கும் செயன்முறை, வெளிப்படைத்தன்மை, மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றில் அரசாங்கம் திருப்தியடைகின்றதா என்பதையும்;

(iv) கற்பித்தல் மற்றும் முகாமைத்துவ செயன்முறைகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

838/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2019 இற்கு அமைவாக அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அனைவருக்குமான ஓய்வூதியமானது நியாயமான முறையில் அதிகரிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) அதன் காரணமாக ஓய்வு பெற்றவர்கள் வெறுப்படைந்துள்ளனர் என்பதையும்;

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவாக ஐந்து கட்டங்களின் கீழ் அதிகரிக்கும் இறுதி சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியத்தை கணிக்க வேண்டுமெனினும், பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2019 இற்கு அமைவாக 2017.01.01 திகதிக்குரியதாக இரண்டு கட்டங்களின் கீழான சம்பளத்தின் அடிப்படையில் மாத்திரமே ஓய்வூதியம் கணிக்கப்பட்டதன் காரணமாக 2016.01.01 திகதிக்கு முன்னர் ஓய்வளிக்கப்பட்ட முப்படை மற்றும் பொலிஸ் வீரர்கள் உட்பட அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற சகலருக்கும் பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவாக ஐந்து கட்டங்களின் கீழ் அதிகரிக்கப்படவிருந்த இறுதிச் சம்பளத்தின் அடிப்படையில் ஓய்வூதியத்தை கணிக்க நடவடிக்கை எடுத்திருப்பின் 2020.01.01 திகதிக்கு முன்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதிய முரண்பாடு நீக்கப்பட்டு அவர்களுக்கு நியாயம் கிடைக்கப்பெறும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இனை துரிதமாக நடைமுறைப்படுத்தி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

603/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தின் மத்திய நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 308 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஆசிரிகம வீதியில் காகொல்லேவ சந்தியிலிருந்து கட்டுக்கெலியாவ சந்தி வரை சுமார் 2 கி.மீ. தூரத்தைக் கொண்ட பகுதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது என்பதை அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிப் பகுதியை புனரமைக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

635/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தின் பழுகாமம், வீரச்சேனை, மாயாபுரம் மற்றும் வன்னி நகர் ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களில் வாழும், குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி கிராம மக்களுக்கு குடிநீர் வழங்க நீர்க் குழாய்களை பொருத்த வேண்டிய தூரத்தின் அளவு யாது என்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களில் நிலவும் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

727/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அப்போதைக்கு அதிகாரத்திலிருந்த சனாதிபதியினால் 2013 சனவரி 15 ஆம் திகதி பிரதம நீதியரசர் பதவிக்கு, அரசியலமைப்புக்கு அமைவாக நியமிக்கப்பட்ட திரு. மொஹான் பீரிஸின் நியமனமானது பின்னர் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) திரு. மொஹான் பீரிஸின் பிரதம நீதியரசர் பதவிக்கான நியமனம் யாரால் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

771/2020

கௌரவ முஜிபுர் ரஹ்மான்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் 2019.04.21 முதல் நூற்றுக்கணக்கான ஆட்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறெனில், 2019.04.21 முதல் 2019.11.16 வரை மற்றும் 2019.11.17 முதல் இன்று வரையிலான காலப்பகுதியில் —

(i) விசாரணைக்காக கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ளவர்கள்;

(ii) தடுத்து வைத்திருத்தல் உத்தரவை நீடித்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்;

(iii) குற்றப்பத்திரத்துடன் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவர்கள்;

ஆகியோரின் எண்ணிக்கையை அவர் தனித்தனியாக இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) பிணை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட அல்லது விடுதலை செய்யப்பட்ட ஆட்களின் பெயர்களையும்;

(ii) தற்போதைய விசாரணை செயன்முறையில் அரசாங்கம் திருப்தியடைகிறதா என்பதையும்;

(iii) சிறு குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஆட்களை விடுதலை செய்வதற்கும் நீடித்த தடுத்து வைத்தல் கட்டளைகளின் கீழ் உள்ள சந்தேக நபர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

639/2020

கௌரவ ரஊப் ஹகீம்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் நிலப் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்படுவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் யாவை என்பதையும்;

(ii) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இதுவரை பிரகடனப்படுத்தப் பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு வனப் பிரதேசமும் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட திகதி, அதில் உள்ளடங்கும் நிலப்பரப்பு மற்றும் தொடர்புடைய வரைபடங்கள் அனைத்தும் பற்றிய விபரங்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்ட வாரியாக தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

729/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் தொடக்கம் கலேவல பிரதேச செயலாளர் பிரிவின் ஊடாக தம்புள்ளை வரை புகையிரத வீதியொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதை அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், அதற்கொன ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

777/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திற்குரிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வதியும் காணி உறுதி உரித்து இல்லாதவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு உறுதிகளை வழங்குவதற்கான முறையியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனின், அந்த முறையியல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

839/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களில் தற்போது கோவிட் – 19 வைரஸ் —

(i) தொற்றியுள்ள;

(ii) தொற்றிய பின்னர் குணமடைந்துள்ள;

(iii) தொற்றியதன் விளைவாக மரணமடைந்துள்ள;

(iv) காரணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள;

தொழிலாளர்களின் எண்ணிக்கை அவர்கள் பணியாற்றும் நாடுகளுக்கு அமைவாக தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைரசு தொற்றியதன் விளைவாக இற்றைவரை தொழில்வாய்ப்புகளை இழந்துள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அவர்கள் பணியாற்றும் நாடுகளுக்கு அமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கோள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) கொவிட் – 19 உலகளாவிய தொற்றுநோய் நிலைக்கு உள்ளாகிய புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களது குடும்பங்களுக்கு பணம் அனுப்பாததால் பொருளாதார அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தொற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புக்கைக்காக சம்பந்தப்பட்ட நாடுகளின் தூதரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

877/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு மற்றும் சட்ட வரையறைகளை விட மிகையாக கடன் வழங்குவதற்கு முன்னர் சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனை பெறப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனையை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு ரீதியாகவும் சட்டரீதியாகவும் குறித்துரைக்கப்பட்ட கடன்பெறுகை வரையறைக்கு அப்பால் வழங்கப்பட்ட கடன், கடனை செலுத்தத் தவறும் பட்சத்தில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் ஏனைய அனைத்துக் கடன்களுக்கு சமமாக கருதப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய வரவுசெலவுத்திட்ட 01/2020 ஆம் இலக்க சுற்றுநிருபம் பற்றி சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனை பெறப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனையை அடிப்படையாகக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

230/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மரக் கட்டைகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மரக் கட்டைகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மரக் கட்டைகள் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மரக் கட்டைகளை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

732/2020

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாடுகளுக்கிடையே பொருட்களை விற்பனை செய்வதற்கு இலகுமான முறை "ஈ – வர்த்தகம்" (E – Commerce) இணையத்தளமூடான விற்பனையாக இருப்பதனால், அதற்காக சுமார் 305 மில்லியன் அளவிலான உலக மக்கள் "பே பேல்" (Pay Pal) மற்றும் "கேட்வே" (Gateway) என்பவற்றைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(ii) இலங்கையின் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு மேற்படி முறையினைப் பயன்படுத்த முடியுமென்பதையும்;

(iii) இலங்கை மத்திய வங்கியால் மேற்படி முறையானது இலங்கையில் ஆரம்பிக்கப்படாமையால் பொருட்கள் / சேவைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து, அந்நியச் செலாவணியை பெறக்கூடிய வருமான வழியானது தடைப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) இலங்கையில் காணப்படுகின்ற "இணையவழி" (online) முறைக்கமைய சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் வெளிநாட்டு முகவரிகளைப் பயன்படுத்தி "பே பேல்" (Pay Pal) கணக்குகளைத் தயார் செய்கின்றன என்பதையும்;

(v) இதன் காரணமாக இலங்கைக்கு கிடைக்கக் கூடிய பெருமளவு நிதியை தரகுப் பணமாக வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் உற்பத்திகள், சேவைகள் "இணையவழி" (online) முறைமைக்கமைய வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கையில் காணப்படும் தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

773/2020

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் இயங்கி வரும் சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சர்வதேச பாடசாலைகளை நிறுவுதல், ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், கட்டணம் அறவிடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளின் போது அப்பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

654/2020

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஏற்புடைய மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக அரசாங்கம் தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி தீர்மானத்தின் மூலம் உள்வாங்கப்படுகின்ற வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் சேனைப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள காணிகளின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி தீர்மானம் காரணமாக துப்புரவு செய்யப்படுகின்ற மேலதிக காணிகளின் விஸ்தீரணம் ஹெக்டயர்களில் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

758/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் கொள்ளப்படும் வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) அவற்றில் அதிகளவான வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்கள் அமைந்துள்ள பிரதேசம் யாது;

(iv) மேற்படி வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் நீரின் கொள்ளளவு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டத்தில் அமைந்துள்ள 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ள அத்தகைய வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை யாது;

(ii) புனரமைக்கப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ள வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றில் 2020 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டுள்ள வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

847/2020

கௌரவ வருண லியனகே,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் அனர்த்த நட்டஈடு வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) இவ்வாறு அனர்த்த நட்டஈடு வழங்கப்படாதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அனர்த்த நட்டஈடு வழங்கப்படாதுள்ள குடும்பங்களுக்கு அனர்த்த நட்டஈடு வழங்குவதற்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

853/2020

கௌரவ அஜித் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள பீல்ட் மாஷல் பதவி வகிக்கும் நபர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவர்களது பெயர்கள் மற்றும் அவர்கள் ஓய்வுபெறவுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு பீல்ட் மாஷலுக்கும் செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், வழங்கப்பட்டுள்ள பணியாட்குழுவினரின் எண்ணிக்கை, உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை, உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய அளிப்புகள் வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(இ) இன்றேல், ஏன்?

939/ 2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நலனோம்புகை அமைப்புகள் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நலனோம்புகை அமைப்புகளின் பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு அத் திணைக்களத்தினால் ஏற்புடைய அமைப்புகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நலனோம்புகை அமைப்புகளின் பதிவுகளை இரத்துச் செய்தமைக்கான அடிப்படை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

643/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள —

(i) தல்பிட்டிகல நீர்ப்பாசன கருத்திட்ட நிர்மாணப்பணிகளின் தாமதத்துக்கான காரணம் யாது;

(ii) 2015 ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்டுள்ள கும்புக்கன் ஓயா நீர்ப்பாசனக் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாது;

(iii) ஹெட ஓயா நீர்ப்பாசனக் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

648/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 முதல் 2018 வரையிலான ஆண்டுகளில் இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு நாடு வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி சுற்றுலாப் பயணிகள் மூலம் இலங்கைக்குக் கிடைத்த அந்நியச் செலாவணி, ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சுற்றுலாப் விடுதிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் இலங்கையில் புதிய சுற்றுலா விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சுற்றுலா விடுதிகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

656/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட ஹபராதுவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நிர்வாகம் செய்யப்படுகின்ற கிராமிய வங்கியில் நிதி வைப்புச் செய்த வைப்பாளர்களது நிதி மீளச் செலுத்தப்படாமை தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன்போது மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கு வைப்புச் செய்தவர்களுக்கு இதுவரையில் செலுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) வைப்பாளர்களுக்கு மேலும் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iv) எஞ்சிய வைப்பாளர்களின் நிதி மீள் செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிதி மோசடி இடம்பெற்ற காலப் பகுதிகளில் பதவியில் இருந்த தலைவர்கள் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தலைவர்கள் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

780/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) முன்னாள் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் கீழ், வவுனியா பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வவுனியா பிரதேச செயலகப் பிரிவிற்கான 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு மத்தியில் வீடுகளை வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் இதுவரை வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி வீடு பெறுநர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் வீடுகள் ஒதுக்கப்படும் அடிப்படை யாது என்பதையும்;

(ii) கள்ளிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கான ஆரம்பக் குடியிருப்பாளர்களுக்கும் பின்னர் குடியமர்த்தப்பட்டவர்களுக்கும் வீடுகளை ஒதுக்கீடு செய்கையில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணிகள் யாவை;

(iii) மேற்படி வீடுகளை ஒதுக்கீடு செய்கையில் எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) இதுவரையில் வீடுகள் கிடைக்கப்பெறாதுள்ளவர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

861/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான பள்ளிமுனை மற்றும் பரப்பாங்கண்டல் கிராமங்களிலும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான வங்காலை கிராமத்திலும் காணிகளை சுவீகரித்துள்ளதன் காரணமாக அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம் மேற்படி கிராமங்களுக்கு விஜயம் செய்து இப்பிரச்சினையை தீர்ப்பதாக மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார் என்பதையும்;

(iii) ஆயினும், மேற்படி மூன்று கிராமங்களிலும் குடியேறியுள்ள பொதுமக்களது காணிப் பிரச்சினை இதுவரையில் தீர்க்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாது;

(iii) இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

33/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கூரகல தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்காக இதுவரை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

140/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புகளைப் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழில் பெறுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இந்நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் விரிவாக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

234/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி வாகனங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

321/2020

கௌரவ புத்திக பத்திறண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மேசைப்பந்து விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் மேசைப்பந்து விளையாடும் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேசைப்பந்து விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை மேசைப்பந்து சம்மேளனம் மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

489/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுமுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தேசிய பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஆகக் குறைந்த எண்ணிக்கையான தேசிய பாடசாலைகளைக் கொண்ட மாவட்டத்தின் பிரதேச செயலகங்களிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமைச்சு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

565/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் போதனா வைத்தியசாலையினால் பாரிய சேவையாற்றப்பட்டு வருகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையிலுள்ள வாட்டுகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி வைத்தியசாலையில் காணப்படுகின்ற கட்டில்களின் எண்ணிக்கை;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக வருகை தருகின்ற நோயாளர்களுக்கு போதியளவு சேவை வழங்கத் தேவையான வசதிகள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

593/2020

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்ட பின்னர் அப்பிரதேச கடற்கரை பெருமளவு கடல் அரிப்புக்கு உள்ளாகிவருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இந்த நிலைமையை தடுத்து நிறுத்துவதற்கு மணல் தடைகளை இடுதல் போன்ற தற்காலிக நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) கடல் அரிப்பினைத் தடுப்பதற்கு எதிர்காலத்தில் நிரந்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் எத்தேதியில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) துறைமுகத்தை அமைத்ததன் காரணமாக காணிகளை இழந்துள்ள மக்களுக்கு துறைமுக அதிகாரசபையினால் மாற்றுக் காணிகள் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) ஆமெனில், அவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) காணிகளை இழந்தவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மாற்றுக் காணிகளை வழங்கும்போது அனைவருக்கும் 20 பேர்ச்சஸ் வீதம் காணிகளை வழங்குவதன் மூலம் நிகழ்ந்த தவறு நிவர்த்தி செய்யப்படும் முறை யாதென்பதையும்;

(iv) துறைமுக அதிகாரசபையினால் அமைக்கப்பட்ட ஒழுவில் கட்டார் வீடமைப்புத் திட்டத்தின் பொதுப்பணிகளுக்கு காணிகளை ஒதுக்கித் தருவதாக வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

598/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலகப் பிரிவில் வேலணை பிரதேச வைத்தியசாலை அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இவ்வைத்தியசாலைக்காக நிரந்தர வைத்தியரொருவர் நியமிக்கப்படாதுள்ளமையினால் பிரதேசத்திலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி வைத்தியசாலைக்காக அங்கீரிக்கப்பட்ட பதவியணி யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தர வைத்தியரொருவர் நியமிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மக்களுக்கு திருப்திகரமான மருத்துவ சேவையினை வழங்குவதற்காக வேலணை பிரதேச வைத்தியசாலையில் தற்போது நிலவும் பதவியணி வெற்றிடங்களை நிரப்பும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

611/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டி பிரதேசத்தில் "மஹநுகலந்த வத்த" எனப்படும் சுமார் 85 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட, தெங்கு பயிர்செய்யப்பட்ட செழிப்பான ஒரு காணி இருந்தது என்பதையும்;

(ii) அது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி என்பதையும்;

(iii) அக்காணி நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றுக்குச் சொந்தமானது என்தையும்;

(iv) இந்தக் காணி வொக்ஸ்வகன் கார் தயாரிப்பு தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்காக "வெஸ்ரன் ஒட்டோ மொபயில்" (Western Auto Mobile) எனப்படும் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கம்பனிக்கு இந்தக் காணி எவ்வடிப்படையில் எவ்வளவு காலப்பகுதிக்கு வழங்கப்பட்டிருக்கின்றதென்பதனை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இக்காணியிலிருந்து வெட்டி அகற்றப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த தென்னை மரங்கள் எந்த அடிப்படையில் விற்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

638/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் தற்போது பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கையானது தேவையான அளவை விட சுமார் நூற்றுக்குப் பத்து வீதம் குறைவாக உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைகளில் மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மருத்துவர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

772/2020

கௌரவ முஜிபுர் ரஹ்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு மாநகர சபை பிராந்தியத்தில்/ மாநகர சபை எல்லையில் உள்ள தேசிய பாடசாலைகளில் அங்கு வசிக்கின்ற வறிய நகர்ப்பிரதேச பிள்ளைகளுக்கு தரம் ஒன்றிற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வது பெரும்பாலும் முடியாத விடயமாக உள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறெனில், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இருக்கின்ற தேசிய பாடசாலைகளின் பெயர்களையும்;

(ii) சமயம் மற்றும் சமயம் சாராத வகையில் வகைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் எவையென்பதையும்;

(iii) போதனா மொழி அடிப்படையில் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்காக ஒதுக்கப்பட்ட வகுப்புகளின் எண்ணிக்கையையும்;

(iv) மும்மொழி தேசிய பாடசாலைகளில் தரம் 1 முதல் 5 வரை தமிழ் மொழியில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(v) ஒவ்வொரு பாடசாலையிலும் போதனா மொழி, இனம் மற்றும் சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையும்;

அவர் கூறுவாரா?

(இ) (i) தற்போது தரம் ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிக்கின்ற செயன்முறை தொடர்பில் அரசாங்கம் திருப்தியடைகிறதா என்பதையும்;

(ii) பல தலைமுறைகளாக பாடசாலைக்கு அருகில் வசிக்கின்ற பெற்றோர்களது பிள்ளைகளுக்கு விசேட ஒதுக்கீடுகளை மேற்கொள்வதன் மூலம் பல்வேறு இன, சமய, சமூகப் பின்புலங்களைக் கொண்ட மாணவர்களுக்கு அதிக இடம் ஒதுக்க முடியுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

774/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன் ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் சொந்தமான பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற குடிநீர், மலசலகூடம், ஆய்வுகூடம், நூலகம் மற்றும் விளையாட்டு வசதிகள் இல்லாத பாடாசலைகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இம்மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட குறைபாடுகளுடன் கூடிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

781/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005 ஆண்டு தொடக்கம் 2015 ஆண்டு வரை அப்போதைய தேசிய கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக பல்வேறு நாடுகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் வகைகள், அவற்றின் பதிவு இலக்கங்கள் மற்றும் அவை பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) அவ்வாகனங்களின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

(iii) அவ்வாகனங்களை தற்போது பயன்படுத்தும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள WP RB- 2639 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட உழவு இயந்திரத்தைப் பயன்படுத்திய அமைச்சு மற்றும் அதன் உரிய பிரிவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2009 ஆண்டு தொடக்கம் 2012 ஆண்டு வரை மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் வகைகள் மற்றும் பதிவு இலக்கங்கள்;

(ii) தற்போது அவ்வாகனங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் இடங்கள்;

வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

862/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள விவசாயக் குளங்களை புனரமைப்பதற்கும், விவசாயிகளுக்கு உரித்தான விவசாய நிலங்களை வெட்டித் துப்பரவு செய்வதற்கும் வனப் பாதுகாப்பு திணைக்களம் தடை விதித்துள்ளது என்பதையும்;

(ii) மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம், முசலி பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான காயக்குலி கிராமத்துக்கு அருகில் அமைந்துள்ள 20 ஏக்கர் காணியை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள மக்களை மீள்குடியமர்த்துவதற்காக வழங்குமாறு கோரி, வனப்பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்துக்கு கடிதமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டு தற்போது சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், அக்கோரிக்கை இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி காணியை மேற்குறிப்பிட்ட விடயத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

882/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களுக்கு 2019 இல் செலவிடப்பட்ட மொத்தத் தொகையை தனித்தனியாக அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) உயர்கல்வி விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை (AHEAD) கருத்திட்டத்தின் துரிதப்படுத்தலின் கீழ், உயர் கல்விக்காக உலக வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த கடன் பெறுமதியையும்;

(ii) உலக வங்கியின் கடன்களின் ஊடாக, உயர் கல்விக்காகக் செலவழிக்கப்பட்ட அரசாங்க செலவினத்தின் சதவீதத்தையும்;

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சான்றுப்படுத்தப்பட்ட தனியார் உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடன்களின் சதவீதத்தையும்;

(iv) AHEAD கருத்திட்டத்தின் கீழ், மாற்றுப் பதவி அமர்த்துகை (secondment) அடிப்படையில் பணியாற்றுவதற்கு கல்வியமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள, அரச உயர் கல்வித் துறையின் பணியாட்களின் எண்ணிக்கையையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

614/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலா வாவியிலிருந்து திசா வாவிக்கு நீரை எடுத்துச் செல்லும் பழைய யோத கால்வாய் சல்வீனியா போன்ற நீர்த்தாவரங்களினால் மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதன் காரணமாக கால்வாயினூடாக நீர் பாய்ந்தோடுவது தடைப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இது குறித்து தொடர்புடைய அலுவலர்கள் பல தடவைகள் அறிவூட்டப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் எந்தவித தீர்வும் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) எதிர்கால பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக நீரை விநியோகிப்பதற்கு முன்னர், மேற்குறிப்பிட்ட நீர்த்தாவரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

855/2020

கௌரவ நலின் பிரனாந்து, — வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தின் நுகர்வோர் பண்ட கையிருப்புக்களின் மொத்த பெறுமதி யாது;

(ii) 2020 ஜனவரி 01 முதல் 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் ஒவ்வொரு மாதத்திற்கான வருமானம் வெவ்வேறாக யாது;

(iii) 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதியில் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த மொத்தப் பணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தில் காணப்பட்ட காலாவதியான பண்டங்களின் பெறுமதி யாது;

(ii) மேற்படி பண்டங்கள் தொடர்பில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

857/2020

கௌரவ ஜகத் குமார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சமுர்த்தி இயக்கமானது இலங்கையில் வறுமையை ஒழிக்கும் பிரதான இயக்கம் என்பதுடன் அது வறுமையை ஒழிப்பதற்காக பெரும் பங்காற்றியுள்ளதென்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதித் தொகையானது உரிய கணக்குகளின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த அரசாங்கத்தின் அரசியல் நற்பெயரைக் கட்டியெழுப்புவதற்காக குறைந்த வருமானம் பெறுபவர்களினால் சமுர்த்தி இயக்கத்தில் வைப்புச் செய்யப்பட்ட பெருமளவு நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதி பயன்படுத்தப்பட்ட பணிகள் மற்றும் இத்தொகை உரித்தாகும் நிதியங்கள் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) இந்நிதியை துஷ்பிரயோகம் செய்வதில் தொடர்புபட்ட நபர்கள் யாவர் என்பதையும்;

(v) அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

866/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாண கல்வி வலயங்களுள் ஆசிரியர் மிகை காணப்படும் கல்வி வலயங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மிகையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு பாட ரீதியில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) கிழக்கு மாகாண கல்வி வலயங்களுள் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் கல்வி வலயங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அவ்வாறு பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு பாட ரீதியில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தற்போது கிழக்கு மாகாண சபை இயங்காத நிலையில் மாகாண சபையின் நிர்வாக நடவடிக்கைகள் நேரடியாக உரிய ஆளுநரின் கீழ் மேற்கொள்ளப்படுவதனால் கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் சமநிலையை ஏற்படுத்துவதற்கு அமைச்சினால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

943/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் காணப்படும் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாகவும் வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி வேலைவாய்ப்பின்மைக்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை;

(iii) மேற்படி தீர்வு வழங்கலின் மூலம் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகள் யாவை;

(iv) மேற்படி இலக்குகளை அடைவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

721/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மாவட்டத்தில், நானாட்டான் பிரதேசத்தில் புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்காக 2020.02.18 ஆம் திகதியன்று அத்திவாரம் வெட்டுகையில் புராதன பெறுமதிவாய்ந்த நாணயங்கள் கிடைத்துள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன்போது எத்தனை நாணயங்கள் கிடைத்துள்ளன;

(ii) அந்த நாணயங்கள் எந்த யுகத்திற்கு உரியவை;

(iii) மேற்படி நாணயங்கள் புழக்கத்தில் இருந்த காலத்தில் நிலவிய ஆட்சி யாது;

(iv) குறித்த நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள மீன் மற்றும் வாள் குறியீடுகளுக்கும், அந்த நாணயங்கள் புழக்கத்தில் இருந்த காலத்தில் நிலவிய ஆட்சிக்கும் இடையிலான தொடர்பு யாது;

(v) இந்த நாணயங்களுக்கான புராதன பெறுமதி பற்றிய விடயங்களை வரலாறு பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

863/2020

கௌரவ மனுஷ நாணாயக்கார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020.01.01 முதல் 2020.10.10 வரை இலங்கைக்கு வருகை தந்துள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழிலாளர்கள் எந்நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளனர் என்பதையும்;

(iii) இலங்கைக்கு வருவதற்காக இதுவரை பதிவு செய்துள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழிலாளர்கள் பணிபுரியும் நாடுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்குப் பின்பற்றப்படவுள்ள வழிமுறை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களை தனிமைப்படுத்துவதற்காக பின்பற்றப்படவுள்ள வழிமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்களின் தனிமைப்படுத்தலை ஒருங்கிணைப்பதற்கு "அவன்கார்ட்" (Avant Guard) எனும் நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக பின்பற்றப்பட்டுள்ள வழிமுறை யாதென்பதையும்;

(v) ஒரு தொழிலாளரை தனிமைப்படுத்துவதற்காக அவன்கார்ட் நிறுவனம் அறவிடும் தொகை யாதென்பதையும்;

(vi) அவன்கார்ட் நிறுவனத்தினால் இதுவரை தனிமைப்படுத்தலுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

878/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் அரசாங்கத்தின் சிவில் மற்றும் இராணுவ கிளைகள் பிரிக்கப்பட்டதிலிருந்து இலங்கை அரசாங்கத்தின் சிவில் கிளையின் உறுப்பினர்களை இராணுவக் கிளையில் அல்லது மறுதலையாக முறையான நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றதா என்பதையும்;

(ii) 2019.11.17 ஆம் திகதி முதல் எவரேனும் சேவையிலுள்ள ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் சிவில் பதவிகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரையும்;

(iv) சிவில் பதவிகளுக்காக அவர்களை நியமித்தமைக்கான நியாயமான காரணத்தை வெவ்வேறாகவும்;

(v) சேவையிலுள்ள ஆயுதப்படை உறுப்பினர்களை சிவில் பதவிகளில் நியமிக்கும் இந்த கொள்கை ரீதியான மாற்றம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதா என்பதையும்;

(vi) இலங்கை நிர்வாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, அரசாங்க மருத்துவ சேவை, இலங்கைச் சுங்கம், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை போன்றவற்றில் சிவில் பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆற்றலுள்ள உத்தியோகத்தர்கள் எவரும் இல்லையா என்பதையும்;

(vii) அவ்வாறெனில், மேற்கூறப்பட்ட சேவைகள் தொடர்ச்சியாக இருப்பதால் ஏதேனும் பயனுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

940/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்வாங்கும் வகையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்கும் வேலைத்திட்டமொன்றை அமைச்சினால் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) வாடகை வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்களுக்கும் மேற்படி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?